RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s331

# கல்மரம் புதினத்தில் சமூகமாற்றங்கள்

## இரா. ஜீவாராணி [அ, *]

[அ] தமிழ்த்துறை, அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி-626163, தமிழ்நாடு, இந்தியா.

# Social Changes in the Kalmaram Novel

## R. Jeevarani [a, *]

[a] Department of Tamil, Ayya Nadar Janaki Ammal College (Autonomous), Sivakasi-626163, Tamil Nadu, India

* Corresponding Author:
jeevarani2408@gmail.com

Received: 30-04-2021
Revised: 19-04-2022
Accepted: 23-04-2022
Published: 16-07-2022

Check for updates

**ABSTRACT**

Only works that understand the pain of the people will be able to stand the test of time. That is what will bring about social change. Similarly, Thilakavathi's novel 'Kalmaram' is about the progressive nature of feminism and the seeds of social change. The woman, who seeks an income equal to that of a man, has told the community the idea that she can do her jobs with her physical strength. The novel aims to rejuvenate the lives of women who have worked tirelessly in the construction industry for a long time by providing them with the necessary technical training, preparing them for men's jobs, and giving them self-confidence.

**Keywords:** Thilakavathi, Social Change, Kalmaram, Construction People

## முன்னுரை

தமிழகக் காவல் துறையின் முதல் தமிழ்ப் பெண் தலைமை இயக்குனர் திலகவதி. இவர் 2001 ஆம் ஆண்டு எழுதிய கல்மரம் என்னும் புதினத்திற்கு 2005 ஆண்டில் சாகித்ய அகாதெமி விருது கிடைத்தது. காவல் துறையில் உயர்பதவி வகித்த திலகவதி அவர்கள் படைப்புலகிலும் தனக்கென ஒரு தனியிடத்தைப் பெற்றுள்ளார். காவல் துறை அதிகாரியாக இருந்து கொண்டு நாட்டின் பல்வேறு பிரச்சினைகளையும், ஒழுக்கச் சீர்கேடுகளையும், பெண்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளையும் கண்டு மனம் வெதும்பி அதனைக் கல்மரம் என்னும் புதினத்தில் படைத்துச் சமூகமாற்றத்திற்கு வழி வகுத்துள்ளார். அதனைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

காசி வேலைகிடைக்காமல், என்றாவது கிடைக்கும் சில்லரைவேலையைச் செய்து சம்பாதிக்கும் ஒரு குப்பத்து இளைஞன். எந்தவேலையும் ஒழுங்காகத் தெரியாதவன். அவனது தாய் ஆதிலட்சுமி மேஸ்திரியாக இருந்து வேலையின் போது விபத்தில் இறந்த தன் கணவனின் கதி பிள்ளைக்கு வரக்கூடாது என்ற கவலையில் கொல்லு வேலைக்குப்போகக்கூடாது என்று அவனிடம் சத்தியம் வாங்கிக்கொள்கிறாள். அவளின் ஒரு மகள் கன்னியம்மாள் கர்பவதி. புகுந்தவீட்டில் பிரச்சனை என்றும் கணவனுக்கு வரக்கூடாத பால்வினை நோய் வந்திருக்கிறது என்றும் சொல்லிக்கொண்டு அம்மா வீட்டுக்கு வந்துவிடுகிறாள். கடைசி மகள் காவேரி பத்தாவது படித்திருக்கும் துடிப்புள்ள பெண். அவள் சுசீலாவோடு நட்புகொள்கிறாள். சுசீலா தன் நல்வாழ்வை விட்டுவிட்டு கட்டடத்தொழிலாளிகளின் நலனுக்காகவே குப்பத்தில் வந்து வாழும் பெண். காசிக்கு மணமுடிக்கிறாள் ஆதிலட்சுமி. வந்துசேரும் மருமகள் ராகினி வசதியாக வாழ்ந்தவள். முதலில் இவர்களின் வீட்டைக்கண்டு முகம் சுழித்துவிட்டு, கொஞ்சநாளிலேயே காசிக்கு தன் சகோதரன் மூலமாக வாட்ச் மேன் வேலை வாங்கித் தருகிறாள்.

அடுக்ககம் கட்டும் தளத்தில் ஷெட் ஒன்று கட்டிக் கொடுக்கிறார் ஆர். ஆர். எம் என்னும் முதலாளி. அங்கே குடியேறும் காசி, ஓரளவிற்கு கையில் காசுபார்க்கிறான். அங்கேயே ராகினிக்கும் கணக்கர் வேலை கிடைக்கிறது. அந்த முதலாளி கொத்தனார் சித்தாள் மற்றும் பிற வேலையாட்களை மனிதாபிமானமில்லாமல் நடத்தும் விதத்தையெல்லாம் இவர்கள் காணநேர்கிறது. உழைப்புச் சுரண்டலையும் பாதுகாப்பில்லாத எளியமக்களின் வாழ்க்கையையும் காணும் ராகினி மனம் மாறி அவர்களுக்காக சுசீலா அமைக்க நினைக்கும் யூனியன் நிறுவும் பணியில் கைகொடுத்து, கொத்தனார் பயிற்சிக்கும் விண்ணப்பித்துச் சேருகிறாள். தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய சம்பளபாக்கியை யூனியன் மூலம் எப்படி வாங்கலாமென்று தொழிலாளர்களுக்குச் சொல்லி நம்பிக்கையூட்டுகிறாள்.

## கதைக்கரு

திலகவதி எழுதிய 'கல் மரம்' என்னும் நாவல் பச்சை மரம் நாளடைவில் கல்மரம் ஆவதைப் போலக் கட்டடத் தொழிலாளியும் உறுதியாகின்றான் என்பதே இந்நாவலின் கருவாகும். இந்நாவல் கட்டிடத் தொழிலாளர்களின் வாழ்வியலை மையமாகக் கொண்டது. கட்டிடத் தொழிலில் ஈடுபடுகின்ற பெண்களின் வாழ்வில் ஏற்படுகின்ற சிக்கல்கள், முதலாளிகளால் ஏற்படுகின்ற சிக்கல்கள் ஆகியவற்றினையும் அச்சிக்கல்களுக்கானத் தீர்வையும் அதனால் அவர்களின் வாழ்வில் ஏற்படுகின்ற மாற்றங்களையும், கல்வி கற்ற பெண்கள் சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய கடமைகள் போன்றவற்றையும் இந்நாவலில் ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

## சுயமரியாதைச் சிந்தனை

கல்மரம் என்னும் நாவலில் திலகவதி பெண்களுக்குச் சுயமரியாதை கிடைக்கவேண்டுமெனில் பெண்கள் ஒவ்வொருவரும் சொந்தக் காலிலே நிற்கவேண்டும். அதற்குச் சுய தொழில் ஒன்று தொடங்க வேண்டும் என்ற ஒரு சமூகமாற்றத்தை ஏற்படுத்த விரும்புகிறார்.

இந்நாவலில் இடம்பெறுகின்ற ராகினி, கஸ்தூரி, சுசீலா போன்ற பெண்கள் சுயமரியாதையோடு வாழவேண்டும் என்று கருதிகின்றனர். இதனை,

> "மத்தவங்களுக்குக் கைகட்டி பயந்து நின்னுக்கிட்டு தொழில்னு எதையும் பண்ணாம சம்பளம் வாங்கறது அவமானம் தான். ஆர். ஆர். எம். பேசற பேச்சுகளை நினைச்சாலே எனக்கு வெறுப்பாயிருக்குது. கையிலே நமக்குன்னு தொழில் ஒண்ணு இருந்தா யாருக்கும் தலைகுனியாம, பயப்படாம, கௌரவத்தை விட்டுக் கொடுக்காமவாழலாம்"

என்று ராகினி தன் சுயமரியாதைச் சிந்தனையை வெளிப்படுத்துவதன் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது (Thilagavathi, 2005).

ராகினி போன்று சுசீலாவும் கட்டடத் தொழிலாளர்களின் நலனுக்காகப் பாடுபடுகின்றாள். அதுமட்டுமின்றி குறிப்பாகப் எபெண்கள் கட்டடத் தொழிலில் சிறந்தது விளங்க வேண்டும் என்று பெண்களின் முன்னேற்றம் பற்றிய சுயமரியாதைச் சிந்தனையை வெளிப்படுத்துகின்றாள்.

## பெண் கல்வியின் அவசியம்

இருபதாம் நூற்றாண்டு வரையிலும் பெண்களுக்குக் கல்வி என்பது மறுக்கப்பட்டிருந்தது. அதனால் பலகொடுமைகள் தலைவிரித்தாடியது. அதன் காரணமாக அனைவரும் பெண்கல்வியின் அவசியத்தை உணரஆரம்பித்தனர்.

> "எல்லார்க்கும் கல்வி சுகாதாரம் வாய்த்திடுக
> எல்லார்க்கும் நல்லநுதல் மாதர் எல்லார்க்கும்
> விடுதலையும் ஒன்றே மணிமுரசம் ஆர்ப்பீரே!"

என்ற பாரதியின் பாடல் வரிகளும் உணர்த்துகின்றன (Bharathidasan, 2010).

அதுபோன்று கல்மரம் என்னும் புதினத்தில் சுசீலா என்னும் பாத்திரத்தின் வாயிலாகப் பெண்கல்வியின் அவசியத்தை ஆசிரியர் வலியுறுத்துகிறார்.

ஒருபெண் கல்வி கற்பதால் தன் குடும்பம் மட்டுமின்றி ஒரு சமூகமே மாற்றம் அடைகின்றது. கல்மரம் புதினத்தில் சுசீலாவின் கல்வி குறித்த விழிப்புணர்வு, ஆதிலட்சுமியின் மகளான காவேரியை மிகவும் மாற்றிவிட்டது. இதனை,

> "முன்னேற்றப் படிப்பகம் என்று போர்டு எழுதித் தொங்கவிட்டிருக்கிற புதிதாய்க் குடிவந்த சுசீலாவோடு பழக ஆரம்பித்த பிறகு அவள் வெகுவாக மாறிவிட்டாள். லேசாகபடிக்கவும் கற்றுக் கொண்டாள்"

என்றவரிகளின் மூலம் அறிந்துகொள்ளமுடிகிறது (Thilagavathi, 2005).

காவேரி சுசீலாவுடன் சேர்ந்தே இருந்த காரணத்தினால் அவளுடைய பேச்சாற்றலும், சிந்தனைத் திறனும் மேலோங்குகிறது. அடுப்பெரிப்பதற்காகக் கன்னியம்மாள் அடுப்புடன் போராடிமிகவும் சோர்ந்துவிடுகின்றாள். அப்பொழுது காவேரி கன்னியம்மாளிடம் அவள் சோர்வினைக் கலைக்கும் விதமாகத் தன்னம்பிக்கையுடன் பேசுகின்றாள். இதனை,

> "இல்லா நானாயிருந்தா என்ன நினைச்சிருப்பேன். பார்த்தியா இந்த அடுப்பை நாம்ப சலிச்சுக்கிட்டதும் தானே எரியுது பரவாயில்லையே இது நம் பிரண்டுதான்னு நினைச்சிருப்பேன்" "நீ சொல்றது ரொம்பச் சரிகாவேரி. அப்படித்தான் நெனக்கனும். எல்லாத்திலேயும் நல்லதையே பார்க்கணும். அதுதான் நமக்குநம்பிக்கயும், சந்தோசத்தையும் தெம்பயும் தரும்"

இதன் மூலம் காவேரியின் பேச்சுத்திறனுக்கும் தைரியத்திற்கும் தன்னம்பிக்கைக்கும் சுசீலாவின் முன்னேற்றப் படிப்பகமே காரணமாகஅமைகின்றது (Thilagavathi, 2005).

## பெண்களின் முற்போக்குச் சிந்தனை

பெண்கள் அனைவரும் தன் கணவன், குழந்தைகள், தன்குடும்பம் என்றுஅனைவரையும் சார்ந்தே வாழவேண்டியுள்ளது. தன் கணவனைப் பிரிந்து வாழ்ந்தால் இந்தச் சமூகம் தன்னை ஏளனமாக ஏசும் என்ற காரணத்தினால் தனக்கு ஏற்படும் அவலங்களை வெளியில் காட்டிக் கொள்ளாமலேயே நடைபிணமாகவே பலபெண்கள் வாழ்கின்றனர். மேலும் குடும்பவாழ்வில் ஒழுக்கம் தவறும் ஆண்களைப் புறஉலகிற்குக் காட்டத் தயங்குகின்றனர் என்பதனைக் கல்மரம் என்னும் புதினத்தில் கன்னியம்மாள் என்னும் பாத்திரத்தின் வாயிலாக ஆசிரியர் வெளிப்படுத்துகிறார்.

கன்னியம்மாள் தனது கணவனின் தவறான ஒழுக்கத்தின் காரணமாக எயிட்ஸ் என்னும் பால்வினை நோயினால் பாதிக்கப்படுகின்றாள். இதனை அறிந்த கன்னியம்மாள் தனது கணவனை விட்டுப் பிரிந்து தன் தாய் வீட்டிற்கே வந்து விடுகின்றாள். ஆனால் கன்னியம்மாளின் தாய் தன்னுடைய மகளின் திடீர் வரவிற்கானக் காரணத்தை அறியமுடியாமல் தவிக்கின்றாள்.

> "எதுக்கும்மா இந்த பேச்செல்லாம். நான் இங்கிருக்கிறது ஒனக்கு கேவலமாக்கித? காசிக்குக் கல்யாணம் பேசவர்றவங்க மின்னாடி எம்மவ வாழாமவந்துட்டான்னு ஒனக்குக் கஷ்டமாக்கிதா? சொல்லுமா. நானு சித்தாளு வேலைக்குப் போயி நாலுகாசு சம்பாரிச்சு நாம்பாட்டுக்குதனியா இருந்துடறேன்"

என்று கன்னியம்மாள் துணிந்து முடிவெடுக்கும் முற்போக்குச் சிந்தனாவாதியாக மாறுகின்றாள் (Thilagavathi, 2018).

## பெண் முன்னேற்றம்

பெண்கள் முன்னேற வேண்டுமெனில் அவர்கள் மனத்தில் தன்னம்பிக்கையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தவேண்டும். இச்செயலினை ராகிணி செயல்படுத்துகின்றாள். கல்மரம்

என்னும் புதினத்தில் கட்டிடத் தொழிலில் ஈடுபடுகின்ற பெண்கள் பலர் நாள் முழுவதும் வியர்வை சிந்தி உழைத்தும் உழைப்பிற்கேற்ற வருமானம் கிடைக்காமல் தவிக்கின்றனர். இத்தகைய பிரச்சனையைத் தொழிற்சங்கங்கள் அமைத்துத் தீர்த்துக் கொள்ளலாம் என்ற விழிப்புணர்வை ராகினி என்பவள் கட்டிடத் தொழிலில் ஈடுபடுகின்ற பெண்களிடம் ஏற்படுத்துகின்றாள். இதனை,

"நமக்கு கையுங்காலும் மட்டுமில்லமன சில இருக்கிற துணிச்சலும் தான் சொத்து. பயப்படாதே நம்மள விட்டு விட்டு வேற ஆளுங்கள அவரு கொண்டாந்தா நாம அவங்களயும் சங்கத்தில சேர்த்திடலாம்"

என்ற ராகியியின் உரையாடல் மூலம் அறிந்து கொள்ளமுடிகிறது.

## மகளிர் தொழிற் பயிற்சி

ஆண்களுக்கு நிகர் பெண்கள் என்பதனை சுசீலா உண்மையாக்குகின்றாள். ஏனெனில் சுசீலா தொழிலாளர்சங்கத்தின் மூலம் பெண்களுக்குக் கொத்தனார் பயிற்சி வகுப்புகளை ஏற்பாடு செய்து தருகின்றாள். இதனை,

"இந்த டிரெய்னிங்லே முதல்மாசம் எழுதப் படிக்கக் கற்றுக் கொடுப்பாங்க. அப்புறம் அடிப்படையான கல்வி விபரங்கள் சொல்லித் தருவாங்க. அடுத்த நாலுமாசம் செங்கல் அடுக்க, கட்டிடம் மார்க் செய்ய, அளக்க, ஒட்டுவேல, பூச்சுவேல, சன்னல் கதவு வைக்கிறதுக்கு டிரெய்னிங். இப்படி அஞ்சு மாசகாலம் டிரெய்னிங்குக்குப் பின்னால கொத்தனாரு உதவியோட சாரம் ஏறி பூசத் தொடங்குவாங்க. ஏற்கெனவே டிலெ டிரய்னிங் முடிச்ச பொம்பளங்க ரொம்ப நல்ல கொத்தனாரா இருக்கிறதா சொல்றாங்க. பேப்பர்ல கூட எழுதியிருக்காங்க"

என்ற உரையாடலின் வாயிலாக அறிந்து கொள்ளமுடிகிறது (Thilagavathi, 2005).

## கட்டுப்பாட்டைக் கட்டுடைத்தல்

பெண்கள் பலர் தன்னுடைய பலம் தெரியாமல் இருக்கின்றனர். ஆனால் பெண்களாலும் அனைத்தும் சாதிக் முடியும். பெண்கள் தன்னுடைய பலத்தினால் உயர்ந்த நிலையினை அடையமுடியும் என்பதனை,

"நாமெல்லாம் கடைசி வரை பொம்பளைங்கிற சித்தாள் வேலைக்குத்தான் லாயக்கானவங்கன்னு நெனச்சிக்கிட்டிருக்கோம். பொம்பளங்க கொத்தனார் கூட ஆவலாமாம்."

என்ற வரிகளின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது (Thilagavathi, 2005).

## துணிச்சல்மிக்கப் பெண்கள்

திலகவதி தன்னுடைய நாவலில் ஒடுக்கப்பட்டுத் துன்பப்படும் பெண்களை மட்டும் படைக்காமல் துணிச்சல்மிக்கத் தன்னம்பிக்கை நிறைந்த பெண்களையும் படைத்துள்ளார். நாவலின் தொடக்கத்தில் சுசீலா என்ற பெண் மட்டும் பொதுநல அக்கறையுடன் திகழ்கின்றாள். பிறகு சசீலாவின் தூண்டுதல் மூலம் காவேரியும் ராகினியும் பொதுநலத்தின் மீது அக்கறை கொண்டு இச்சமுதாயம் முன்னேற வேண்டும் என்ற தீர்மானம் எடுக்கின்றனர். இதனை,

"பெண்கள் எதையும் சாதிக்க முடியும்னு காட்டுறதுக்கு எதச் செய்ய முடியுமோ அதயெல்லாம் செய்யனும். நான் மேல்நாட்டுப் பெண்களைப் பத்திச் சொல்ல வரல அடித்தட்டிலே வாழுற தொழிலாளி வர்க்கத்தைப் பத்தி சொல்றேன்"

என்ற ராகினியின் கூற்று வெளிப்படுத்துவதாய் அமைந்துள்ளது (Thilagavathi, 2005).

ராகினி முதலில் அறியாமை மிக்கவளாகக் காணப்படுகின்றாள். ஆர்.ஆர்,எம். சொல்கின்ற கருத்துக்கள் அனைத்தையும் வேதவாக்காகக் கொள்கின்றாள். ஆனால் அவன் கட்டடத்

தொழிலாளர்களைப் படுத்தும் பாட்டினைப் பார்த்து அவனுடைய அரக்கக் குணத்தை அறிந்து கொள்கின்றாள். சுசீலாவின் அறிவுரையின் படி தன்னுடைய முதலாளியை எதிர்க்கும் அளவிற்குத் துணிச்சல்மிக்கப் பெண்ணாக மாறுகின்றாள்.

> "நமக்குப் பாக்கிப் பணம் தந்து கணக்க முடிச்சதுக்கு அப்புறமாத்தான் ஆர்,ஆர்,எம். அடுத்த வேலையைத் தொடங்க முடியும்னு யூனியன் மூலமா கடிதம் அனுப்புவாம். அப்படியே விரல் நசுங்கிப் போன கம்சலைக்கும் நட்ட ஈடு கேட்டிடுவோம்"

என்ற ராகினியின் கூற்றுத் தொழிலாளர்களுக்கு நம்பிக்கையையும் துணிச்சலையும் ஊட்டுவதாக அமைகிறது (Thilagavathi, 2010).

## ஒற்றுமையுடன் செயல்படுதல்

சுசீலா கட்டடத் தொழிலாளர்களின் முன்னேற்றத்திற்காக அக்கறையுடன் செயல்பட்டாள். அவளது ஆலோசனையின்படி தெங்களுக்கான யூனியன் ஆரம்பித்தனர். சுசீலா தனிப் பெண்ணாக இருந்துகட்டடத் தொழில் செய்யும் மக்களின் துயர்நிலையைக் களைவதற்காகப் பாடுபட்டாள். தொழிலாளர்களிடையே ஒற்றுமை இருந்தால் யாரை வேண்டுமானாலும் எதிர்க்கலாம். சுசீலாவுடன், ராகினி, காவேரி மற்றும் பிற தொழிலாளர்கள் இணைந்து போராடத் தயாராக இருந்தனர்.

> "ஒற்றுமைப்பட்ட தொழிலாளி வர்க்கத்தை விட உலகத்தில் பலமானது எதுமே இல்லன்னு ஜீவா சொல்லியிருக்கிறார்." காவேரியும் மற்றவர்களும் "இது சாவில்லாத வார்த்த என்றார்கள்"

என்ற பகுதி தொழிலாளர்கள் ஒன்று பட்டுப் போராடினால் எதையும் சாதிக்கலாம் என்பதை வெளிப்படுத்துவதாய் அமைந்துள்ளது (Thilagavathi, 2005).

## தீர்க்கமான முடிவெடுக்கும் திறன்

தொழிலாளி இன்றி எதையும் சாதிக்க முடியாது என்பதனை உணர்ந்த கட்டடத் தொழிலாளர்கள் சங்கம் அமைத்து தொழிலாளி வர்க்கத்தின் ஒற்றுமையை வெளிப்படுத்த வேண்டும் என்று தீர்மானம் செய்கின்றனர். இன்றைய உலகில் பெண்களும் கொத்தனார் ஆகலாம் என்பது சாத்தியமாகிறது. இதனை,

> "பொம்பளைங்கறவ சித்தாள் வேலைக்குத்தான் லாயக்கானவங்கன்னு நினைச்சிக்கிட்டிருக்கோம். பொம்பளைங்க கொத்தனார் கூட ஆவலாமாம், அதாவது பொண்ணுங்களுக்குக் கொத்தனார் வேலைக்கு டிரெய்னிங் கொடுக்கறாங்க. அப்புறம் எந்தப் பொண்ணாலும் கொத்தனாராக ஆயிட முடியும்னு அடிச்சுச் சொல்றாங்க"

என்ற கூற்றின் வாயிலாக, முதலாளியின் இரக்கமில்லாத உணர்வை எண்ணி பெண்கள் தங்கள் இன்னலுக்குத் தாங்களே தீர்க்கமான முடிவெடுக்கும் திறனினைப் பெற்று விட்டதனை அறிந்து கொள்ள முடிகிறது (Thilagavathi, 2005).

## முடிவுரை

பெண்களுக்குச் சுயமரியாதை கிடைக்க வேண்டுமெனில் பெண்கள் ஒவ்வொருவரும் சொந்தக் காலிலே நிற்கவேண்டும். அதற்குத் தொழில் ஒன்று தொடங்கவேண்டும் என்ற ஒரு சமூகமாற்றத்தை ஏற்படுத்த விரும்புகிறார். ஒரு பெண் கல்வி கற்பதால் தன் குடும்பம் மட்டுமின்றி ஒரு சமூகமே மாற்றம் அடைகின்றது. பெண்கள் முன்னேற வேண்டுமெனில் அவர்கள் மனத்தில் தன்னம்பிக்கையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தவேண்டும். வேலைவாய்ப்புத் தளங்களில் ஆண் பெண் என்ற வேற்றுமைகள் நீங்க இணையான தொழில்பயிற்சிகள் வழங்கியும் நிகரான ஊதியம் கொடுத்தும் அவர்களது இலக்கை அடைய வழிவகுப்பதன் மூலம் பெண் மேம்பாடு அடைவாள் என்பதை உணர முடிகிறது. பெண்கள் பலர் தன்னுடைய பலம் தெரியாமல் இருக்கின்றனர். ஆனால் பெண்களாலும்

அனைத்தும் சாதிக்க முடியும் பெண்கள் தன்னுடைய பலத்தினால் உயர்ந்த நிலையினை அடையமுடியும். ஆணின் சார்பு நிலையிலிருந்து பெண் தன்னை விடுவித்துக் கொள்ள வேண்டுமானால் பெண்களுக்கு வேலைவாய்ப்பு இன்றியமையாததாக அமைகின்றது. இதன் மூலமே பெண் ஆணுக்கு நிகரான உயர்வை அடைய முடியும் என்பதை இப்படைப்பானது வலியுறுத்துகிறது.

## References

Bharathidasan, (2010) Bharathiar Kavithagal, Uma Pathippagam, Chennai, India.

Thilagavathi, (2005) Kalmaram, New Century Book House, Chennai, India.

Thilagavathi, (2010) Kalmaram (Maanavar Pathippu), AmrudhaPathippagam, Chennai, India.

Thilagavathi, (2018) Kalmaram, GeeYe Publications, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License